SWIS-H
STATEWIDE INFANT
SCREENING - HEARING



# ‘செவித்திறன் நோய் அறிதல் மதிப்பீட்டிற்’ (Audiology Assessment) க்கென குழந்தை நேரடியாகப் பரிந்துரைக்கப்படுவதேன்?

பிறந்த முதல் சில வாரங்களில் உங்கள் குழந்தைக்கு தொடர்ச்சியான சில உடல்நலப் பரிசோதனைகள் அளிக்கப்படும்.இவற்றில் ஒன்று காது கேட்கும் திறனில் இழப்பு இருக்கிறதா என்று கண்டுபிடிப்பதற்காக.

குழந்தை பிறந்ததும் கூடிய விரைவில் ‘முதலாவது செவித்திற திரைப் பரீட்சை’ (hearing screen) செய்யப்படும். சில குழந்தைகளைப் பொறுத்தவரையில், சோதனை முடிவுகள் துல்லியமாக இருக்காது என்ற காரணத்தினால் இக் குழந்தைகளுக்கு இச் சோதனை ஏற்றதாக இருக்காது. எனவே, செவித்திறன் சோதனையில் சிறப்புப் பயிற்சி பெற்ற ‘ஒலியியலாளர்’ (audiologist) ஒருவரால் நேரடியாக நோய் அறிதல் மதிப்பீடு செய்யப்படுவதற்கென இக் குழந்தைகளுக்கு பரிந்துரை அளிக்கப்படும்.

## நேரடியான செவித்திற நோய் அறிதல் மதிப்பீட்டிற்குக் குழந்தை பரிந்துரைக்கப்படுவது ஏன்?

நேரடிப் பரிந்துரைப்பிற்கான காரணங்களில் கீழ்வருவன அடங்கும்:

- ‘அட்ரீஸியா’ (atresia) எனப்படும் ‘செவிக் குழல்’ (ear canal) இல்லாத காரணம்
- ‘மைக்ரோரீயா’ (microtia) எனப்படும் வளர்ச்சியடையாத காது உள்ள நிலை
- நோய்க்கிருமிகளால் ஏற்படும் ‘மெனிஞ்சைட்டிஸ;’ எனப்படும் நோய் (உறுதிசெய்யப்பட்ட, அல்லது சந்தேகிக்கப்பட்ட நிலை) (Bacterial or Viral Meningitis (confirmed or suspected))
- பிளவுற்ற உதடு/மேல் அன்னம்) (Cleft Lip/Palate)
- ‘டவுன் ஸின்ட்ரம்’ (Down Syndrome) எனப்படும் அறிகுறி

‘தீவிர மருத்துவக் கவனிப்’ (intensive care) பில் இருக்கும் குழந்தைகளுக்கு முதலாவது செவிமடுப்புச் சோதனை செய்யப்பட்டிருந்தாலும், குழந்தைமருத்துவரது அறிவுரையின்படி ‘நேரடி செவித்திறன் நோய் அறிதல் மதிப்பீட்டிற் (direct diagnostic assessment) க்காக SWIS-H ஒருங்கிணைப்பாளரால் இக்குழந்தைகள் பரிந்துரைக்கப்படலாம்.

பிறக்கும் 1000 குழந்தைகளில் ஏறத்தாழ ஒரு அல்லது இரண்டு குழந்தைகளுக்கு குறிப்பிடத்தக்க அளவில் காது கேட்கும் திறனில் இழப்பு ஏற்பட்டிருக்கும்.

உங்கள் குழந்தைக்கு சரியான அறிவுரை-ஆலோசனையும், உதவியும் வழங்கப்பட உதவும் வகையில் உங்கள் குழந்தைக்குக் காது கேட்கும் திறன் எந்த அளவிற்கு உள்ளது என்பதை கூடிய விரைவில் கண்டறிய வேண்டியது இன்றியமையாததாகும்.

உங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் மருத்துவமனையிலிருந்து 100 கிலோ மீட்டருக்கும் மேற்பட்ட தொலைவில் நீங்கள் வசிப்பவரானால், ‘SWIS-H பயண உதவித் திட்டம்’ குறித்து இத் தகவலேட்டை உங்களுக்குக் கொடுத்தவரிடம் கேளுங்கள்.

‘செவித்திற நோய் அறிதல் மதிப்பீடு’ (diagnostic assessment) குறித்து மேலதிகமாய்த் தெரிந்துகொள்ள விரும்பினால், ‘செவித்திற நோய் அறிதல் மதிப்பீடு என் குழந்தைக்கு ஏன் அவசியப்படுகிறது?’ எனும் தகவலேடு வேண்டுமென இந்தத் தகவலேட்டை உங்களுக்கு அளித்தவரிடம் கேட்கவும்.

**மேலதிகத் தகவல்களுக்கு தயவு செய்து கீழ் வரும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்:**

http://www.health.nsw.gov.au/kids-families

உள்ளூர்த் தொடர்பு/சந்திப்புநேர விபரங்கள்

சுகாதார அறிவுரைக்காக *healthdirect Australia* –உடன் தொடர்புகொள்ளுங்கள்.
http://www.healthdirect.gov.au/
**1800 022 222**

**Tamil** - Why has my baby been referred directly for a diagnostic audiology assessment?

NSW GOVERNMENT | Health

© NSW Health September 2016 SHPN (NKF) 150308